**தலைப்பு 230 – சட்டவரைபுத் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 230 – சட்டவரைபுத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சட்டவரைபுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்டவரைபுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் புதிய CIGAS இணையத்தை பயன்படுத்தும் முறைமை ஒன்றைப் பெற்று இறுதியாக திறைசேரி அச்சிடல்கள் நிதிக்கூற்றுக்களில் இணைக்க வேண்டியிருந்த போதிலும் SA 20, SA 21 மற்றும் SA 40 என்ற அச்சிடல் இணைக்கப்பட்டடிருக்க வில்லை. | SA 20, SA 21, SA 40 அச்சிடல் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரித்தானதால் திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் அந்த அச்சிடல்கள் இணைப்பாக காண்பிக்க முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் திறைசேரி அச்சிடல் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி கணக்குக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 3,000 ஆக இருந்ததுடன் அது சரியாக வங்கி இணக்கக்கூற்றுக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களின் இணைப்பு (viii) இல் வங்கி கணக்கு தொடர்பான 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை அறிக்கையில் வங்கிக்கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 3,415,155 ஆக ரூபா 3,412,155 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,415,155 தொகை திறைசேரி உத்தியோகபூர்வ கணக்கிற்கு மீதி மாற்றுவதற்கு முன்னர் பெறுமதி இணைப்பு viii இன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் அது வங்கி இணக்கக்கூற்றில் திறைசேரிக்கு மாற்றப்பட்ட பெறுமதி மற்றும் ரூபா 3,000 இறுதி மீதி என்ற இரண்டினதும் கூட்டுத்தொகை ஆகும். வங்கிக்கூற்றின் பிரகாரம் மீதியான ரூபா 3,000 வங்கி இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வங்கி இணக்கக்கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வருமானப் பெறுவனவுகள்

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டில் வித்துத் தீர்க்கப்பட்ட ரூபா 145,059 ஆன அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் விற்பனையால் கிடைத்த வருமானம் ரூபா 2,510 பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசு பாய்ச்சலின் கீழ் உரிமை மூலதன அகற்றல் நிதி ஏற்பாடு பௌதீக சொத்துக்கள் விற்பனையின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அது செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைப் பாகங்கள் விற்பனையால் கிடைத்த வருமானம் ஆன ரூபா 2,510 பெறுமதி எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்கும் போது பௌதீக சொத்துக்கள் விற்பனையால் உருவான வருமான முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் விற்பனையால் கிடைத்த வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தக ஏடுகள் பேணிச்செல்லப்படாமை**

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (i) **அடியிதழ் புத்தகப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ் புத்தகப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்புக்களின் தவறுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ் பதிவேடுகளை முறையாக நாளதுவரையாக்குமாறு விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப்பிரமாணம் 341 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜீ.ஏ.என் 20 படிவத்தின் பிரகாரம் அடியிதழ் புத்தகப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) **வாகன ஓட்டக் குறிப்புக்கள்** | | |
| நிதிப்பிரமாணம் 1645 இன் பிரகாரம் ஓட்டக்குறிப்புக்கள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | குழாம் வாகன சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நிதிப்பிரமாணம் 1645 இன் பிரகாரம் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்வதற்கு உரிய விடயப்பொறுப்பு மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப்பிரமாணம் 1645 இன் பிரகாரம் ஓட்டக் குறிப்புக்கள் நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 மீண்டெழும் செலவின விடயங்களில் ரூபா 6,120,000 ஆன நிதியேற்பாட்டு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ஏனைய செலவிடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் நாளாந்த கடமை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக இடையூறு இன்றி நடாத்திச் செல்வதற்காக மேலதிகமாக செலவிட வேண்டியிருந்த அத்தியாவசிய செலவினங்களை தீர்த்து வைப்பதற்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ள செலவின விடங்களில் செலவினங்கள் சிக்கனமாக செலவிடப்பட்டமையால் எஞ்சியிருந்த நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | போதியளவான பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் 01/2023 என்ற வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 02(இ)(ii) பந்தியின் பிரகாரம் செலவின விடயக்குறியீட்டு இலக்கம் 1403 இற்கான செலவினத்தை ஆக குறைக்க வேண்டியிருந்த போதிலும் அந்த செலவின விடயத்திற்காக மேலதிக நிதியேற்பாடு ரூபா 1,900,000 மற்றும் ரூபா 1,650,000 நிதியேற்பாடு நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றி 26 சதவீதத்தால் மதிப்பீட்டு நிதியேற்பாடு அதிகரித்து செலவிடப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் மாதம் மின்சாரம் மற்றும் நீர் பட்டியல் கட்டணங்கள் தீர்த்து வைப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாட்டிற்காக கவனத்தில் கொண்டு நிதியேற்பாடு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்படைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2023 சனவரி 27 ஆந் திகதிய இலக்கம் 01/2023 என்ற வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 02(இ)(iv) பந்தியின் பிரகாரம் செலவின குறியீட்டு இலக்கம் 1401 இற்காக செலவின கட்டுப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 2,050,000 நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டு 20 சதவீதத்தினை உடைய மதிப்பீட்டு நிதியேற்பாடு அதிகரித்து செலவிடப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தான உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து படிகளை செலுத்துவதற்காக நிதியேற்பாடு போதியளவில் இல்லாமையின் காரணமாக நிதியேற்பாடு வழங்கவேண்டி ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்படைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கடப்பாட்டு இலக்கத்தின் பிரகாரம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 7,047 ஆன பொறுப்புக்கள் பொறுப்புக்கள் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களிலும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 7,047 தொகை தவறொன்றினால் பொறுப்புக்கள் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை மாற்றியமைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் சரியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தர் / பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த மற்றும் ஏனைய நிதிகூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கண்காணிக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்பின் காரணமாக அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவை | | | | |
| 139(4) | 385,731 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்தப்படுகின்ற ஒவ்வொரு தொகைக்கும் முறையான பற்றுச்சீட்டு வழங்கவேண்டியிருந்த போதிலும் ரூபா 385,731 பெறுமதியான 04 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பெறுநர் அல்லது அவரின் முகவரால் பணம் பெற்ப்பட்டிருந்தமை கையொப்பமிட்டு வைத்தல் முறையாக பணம் செலுத்தப்பட்டுள்ளதுட ன் அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் பணம் பெறுநரால் விநியோகப்படுகின்ற பற்றுச்சீட்டைப் பெற்று அதில் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் இணைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடை ய நிதிப்பிரமா ணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 232(2) | 978,037 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உறுதிச்சீட்டின் பெறுமதி இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடவேண்டியிருந்த போதிலும் 05 உறுதிச்சீட்டுக்களுக்குரிய பெறுமதி எழுத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | குறைபாடுகள் யாவும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உறுதிச்சீட்டுக்களைத் தயாரிக்கின்ற மற்றும் பரீசீலிக்கின்ற உத்தியோகத்தர் களுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 225(1) | 1,775,854 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் குறித்துரைத்த மாதிரிப் படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பி கொடுப்பனவு செய்வதற்காக சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 17 உறுதிச் சீட்டுக்களுக்குரிய பெறுமதி பின்பக்கத்தில் எழுத்தால் குறிப்பிடப்படாதிருந்ததுடன் 03 உறுதிச் சீட்டுக்களுக்குரிய திகதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் யாவும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உறுதிச்சீட்டுக்களைத் தயாரிக்கின்ற மற்றும் பரீசீலிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

(ii) **அரச நிர்வாக சுற்றறிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 30/2016 என்ற சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குழாம் வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், தற்போது KH - 5591 மற்றும் KM - 0905 என்ற வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் | 2023 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டம் 2022 திசெம்பர் 13 ஆந் திகதி | தொடர்புடைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் |

| | | |
|---|---|---|
| பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டம் நடப்பாண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்று அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டிற்குரிய பெறுகைத்திட்டம் 2022 திசெம்பர் 13 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தயாரிக்கப்பட்டு தாமத வழுவினால் 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் 2024 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டம் குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் படி 2023 சனவரி 01 இல் உள்ளவாறு வரைவு செய்யப்பட்டு ஆரம்ப அல்லது இறுதி வரைவாக கையளித்து சட்டமாதிபர் அல்லது ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களின் அவதானிப்பு மற்றும் ஆலோசனைகள் எதிர்பார்ப்புடன் காணப்படுகின்ற 297 கோரிக்கைகள் மற்றும் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு வரைவு பூர்த்தி செய்யப்படாத 100 கோரிக்கைகள் ஆக மொத்தமாக 397 கோரிக்கைகள் நீண்டகால ரீதியில் ஆலோசனை வழங்கப்படாதிருந்த மூடப்பட்ட கோவைகள் 105 ஆகும். | 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு வரைவு பூர்த்தி செய்யப்படாத 100 கோரிக்கைகள் மற்றும் சட்டமாஅதிபரி அல்லது ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களில் இருந்து அவதானிப்புக்கள் மற்றும் ஆலோசனையின் எதிர்பார்ப்புடன் எஞ்சிக் காணப்படுகின்ற 297 கோரிக்கைகளுடன் மொத்தமாக 397 கோரிக்கைகளில் நீண்டகாலமாக ஆலோசனை வழங்கப்படாது மூடப்பட்ட 105 கோவைகள் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் செயலாற்றலை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2023 ஒக்தோபர் 03 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 04 மாதம் தாமதம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் குறித்துரைத்த காலப்பகுதியில் செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உத்தியோகத்தர் அரசாங்க சேவையிலிருந்து கேட்டு விலகுவாராயின் அல்லது ஓய்வு பெற்றுச் செல்லல் அல்லது பதவியை விட்டுச்செல்லல் அல்லது சேவையிலிருந்து விலக்கப்படுகின்ற திகதியிலிருந்து கடன் பாதுகாப்பை மேவுகை செய்யும் அதிகாரம் அல்லாததாக குறிப்பிடப்பட்டிருக்கும் போது தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் கடன் பிணை காப்புறுதியின் அடிப்படையில் நான்கு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 346,194 பெறுமதியில் இடர்கடன் விநியோகிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் கடன் சேமிப்பு காப்புறுதி மேவுகையின் அடிப்படையில் இடர்கடன் விநியோகிக்காமல் நபர்களின் பிணையின் அடிப்படையில் மாத்திரம் கடன் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் பாதுகாப்பு காப்புறுதி மேவுகையின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு இடர்கடன் விநியோகிக்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 149 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 86 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 63 ஆக இருந்தது. அது அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியில் 42 சதவீதமாக இருந்தது. | பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் காணப்படுதல் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளிக்கின்றமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சட்டவரைபு வழங்கல் நோக்காகக் கொண்டு சட்டவரைபுத் திணைக்களத்தின் செயலாற்றலுக்காக நேரடியாக பங்களிப்பு வழங்குகின்ற சிரேஸ்ட மற்றும் மூன்றாம் நிலை தரத்தில் 11 பதவிகளில் 05 பதவிகளுக்காக 35 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 50 சதவீதத்தைக் கொண்டிருந்தது. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் காணப்படுதல் செயலாற்றல் தொடர்பில் தாக்கமளிக்கின்றமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சிரேஸ்ட உதவி சட்ட வரைஞர் பதவிக்காக 08 வெற்றிடங்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர் பதவிக்காக 01 வெற்றிடம் காணப்பட்டது. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 86 உத்தியோகத்தர்களில் 18 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் கடமைப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளதுடன் 68 உத்தியோகத்தர்களுக்கு கடமை பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கடமை கையளித்தல் பட்டியல் வழங்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு அந்த பட்டியல்களை வழங்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களுக்கு கடமைப்பட்டியல் வழங்கப்படல் வேண்டும். |